# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.

# MCOP. No.333/2023

2025-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 18-ஆம் நாள் வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய **ம.சா.1 வது** நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு-1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தனபால் | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | வட்டம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

**<u>முதல் விசாரணை</u>**:

நான் இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். முதல் தகவல் அறிக்கை நகல் ம.சா.ஆ.1, பிரேத கூராய்வு அறிக்கை நகல் ம.சா.ஆ.2, இறப்பு சான்று நகல் ம.சா.ஆ.3, வாரிசு சான்று நகல் ம.சா.ஆ.4, 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீடு சான்று நகல் ம.சா.ஆ.5,

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை</u>**:

நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை. விபத்து சமயத்தில் என்அப்பா ஓட்டிசென்ற இருசக்கர வாகனம் அவருடையதாகும். அவர் ஓட்டிசென்ற வாகனத்தில் பதிவு சான்று மற்றும் காப்பீட்டு சான்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவருக்கு ஓட்டுநர் உரிமம் கிடையாது என்றால் சரியல்ல. அவருடைய ஓட்டுநர் உரிமத்தை நீதிமன்றத்தில் தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். அந்த வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வு செய்தார். அபராதம் செலுத்தி வாகனத்தை பெற்றுக்கொண்டேனா என்றால் ஞாபகமில்லை. என்னுடைய ஊர் இருர். தீவணக்கடை ரோட்டின் கிழக்குபக்கம் உள்ளது. எங்கள் வீடு ரோட்டின் மேற்குபக்கம் ஊரில் உள்ளது. விபத்து சர்வீஸ் ரோட்டின் முடிவில் நடந்தது. பின்னால் வந்த வாகனத்தை கவனிக்காமல் என்அப்பா ரோட்டை கடந்ததால் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. எனக்கு திருமணம் ஆகிவிட்டது. என் சகோதர, சகோதரிகளுக்கு திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். என்பெற்றோருடன் ஒன்றாக ஒரே

வீட்டில் தான் இருந்தோம். மனுதாரர்களின் ஆதார் அட்டை நகல்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்அப்பாவின் ஆதார் அட்டை நகலை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்அப்பாவின் பிரேத கூராய்வு அறிக்கையில் வயது திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்அப்பாவின் வயது 64 என்பதை காட்ட மருத்துவரிடம் ஆவணம் கொடுத்தேன் என்பதை காட்ட நான் ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்அப்பாவின் வருமானத்தை காட்ட நான் ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால்சரிதான். என்அப்பா வைத்திருந்த நிலத்தில் நான் விவசாயம் செய்துவருகிறேன் என்றால் சரிதான். என்அம்மாவை தவிர வேறு யாரும் என்அப்பாவின் வருமானத்தை சார்ந்து இல்லை என்பதால் என்அம்மாவை தவிர வேறு யாரும் நஷ்டஈடு கோரமுடியாது என்றால் சரியல்ல. என்அப்பாவின் வயது 76 என்று ஆதார் கார்டில் குறிப்பிடபட்டுள்ளதால் வேண்டுமென்றே அவருடைய ஆதார் அட்டையையும், எங்களுடைய ஆதார் அட்டையையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. தலைக்கவசம் அணியாமல் சென்றதால் என்அப்பா தலையில் அடிப்பட்டு இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநர் உரிமத்தை தாக்கல் செய்யவில்லை என்றால்சரிதான். பாலிசி விதிமீறல் இருப்பதாலும், விபத்திற்கு என்அப்பா காரணம் என்பதாலும், 2ம் எதிர்மனுதாரர் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>:**

இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.